# Chezhumai செழுமை

# TIST India



T I S T F a r m e r s H e l p W o r l d w i d e P r o b l e m

## The International Small Group & Tree Planting Program

TIST India: 19/8, Lake View Road, Kottur, Chennai 600 085, Tamil Nadu, India
Phone : +91 44 42188438 / Mobile: +91 9840299822 / Email: josephrexon@tist.org / Web: www.tist.org

## HELPLINE

For any information or help
Dial 9003020836 / 9003020839 / 9003020843

If you have any difficulty in TIST Program Dial 9840299822

Our landline: +91 44 42188438

Our email: josephrexon@tist.org

Our address: 19/8, Lake View Road, Kottur, Chennai 600085

## தொழில்முறை உதவி

எந்த தகவல் மற்றும் உதவிக்கு
டயல் பண்ணுங்கள் : 9003020836 / 9003020839 / 9003020843

உங்களுக்கு டி.ஐ.எஸ்.டி. திட்டத்தில் ஏதாவது கஷ்டம் இருப்பின்
டயல் பண்ணுங்கள் : 9840299822

எமது நிலவழி இணைப்பு :
+91 4442188438

எமது மின்அஞ்சல் :
Josephrexon@tist.org

எமது விலாசம் :
19/8 ஏரிக்கரைச் சாலை கோட்டூர்,
சென்னை 600085

## Prepare seedlings by your own efforts

It is a good practice to prepare seedlings by your own efforts. You will save lot of money and more important is that, you can prepare the seedlings with natural manure along with good soil taken from your own land. After transplanting the seedlings in your own land from where soil was taken, the seedlings will easily grow as the soil is not new for the seedling. If any member needs knowledge to start seedlings / nursery, you can contact Dhanasekar from TIST in 9003020842, he will help you where to get seeds, how to develop seedlings and maintain a good nursery. Do not think that if the seedlings are bought for very costly price the seedling quality will be good. Be prudent and help yourself with our expertise.



## மர நாற்றுகளை உங்களின் சொந்த உழைப்பில் தயார் செய்யவும்

உங்களின் சொந்த உழைப்பில் மர நாற்றுகளை தயார் செய்வது நல்ல ஒரு செயல் ஆகும். இவ்வாறு செய்தால் பணத்தை சேமிக்க முடியும் அதே நேரத்தில் மரக்கன்றுகளை இயற்கை உரத்துடன் உங்கள் நிலத்தில் உள்ள நல்ல மண் வகைகளை கலந்து நல்ல நாற்றுகளை தயாரிக்க முடியும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட இந்நாற்றுகளை நடவுசெய்தப் பின், இந்த நாற்றுகள் நன்றாக எளிதில் ஓங்கி வளரும் ஏனெனில் இந்த நாற்றுகளுக்கு நடவு செய்யப்பட்ட பூமி மற்றும் மண் புதிதல்ல. சிறு குழு உறுப்பினர்களுக்கு நாற்றுகள் மற்றும் நாற்று பண்னை எவ்வாறு தயாரிக்க வேண்டும் என்ற பயிற்சி தேவையென்றால் TIST யின் தனசேகரை 9003020842 என்ற தொலைப்பேசியில் தொடர்புகொள்ளவும் அவர் உங்களுக்கு விதைகளை எங்கே வாங்குவது, நாற்றுகளை எவ்வாறு தயாரிப்பது மற்றும் நாற்று பண்னையை எவ்வாறு பராமரிப்பது என்றவற்றை பற்றி பயிற்சி அளிப்பார். நாற்றுகளை அதிக விலை கொடுத்து வாங்கினால் அந்நாற்றுகள் நல்ல தரமாக உள்ளது என்று தவறாக நினைத்து விடாதீர்கள். புத்திசாலியாக இருந்து TIST–ன் உதவியுடன் உங்களுக்கு நீங்களே உதவி செய்துகொள்ளுங்கள்.

## Best practices in this month Chezhumai

1. Planting multiple tree species
2. Planting trees with good spacing
3. Practicing short time crops as intercrops regularly
4. Encouraging non members to participate in TIST Program
5. Live a contented life with what you have
6. Following the natural way in planting trees and agriculture
7. Stop burning the agriculture waste and use them for mulching
8. Avoid to buy seedlings for high price and taking initiative to prepare seedlings by own efforts with in ones own grove



Members in TIST Program are happy with limited needs
TIST திட்டத்தில் சிறுகுழு உறுப்பினர்கள் தேவைகளை குறைத்துக் கொண்டு மகிழ்ச்சியாக இருக்கின்றனர்.





Sapota trees planted by Senthilkumar Small Group
சப்போட்டா மரம் நடவு செய்த செந்தில் குமார் சிறுகுழு



## இம்மாத செழுமை இதழில் வரும் சிறந்த பயிற்சி முறைகள்

1. பல விதமான மரங்களை நடவு செய்வது
2. நல்ல இடைவெளி விட்டு மரங்களை நடவு செய்வது
3. குறுகிய கால பயிர்களை ஊடுபயிராக தொடர்ந்து சாகுபடி செய்வது
4. TIST–ல் இல்லாத விவசாயிகளை ஊக்கப்படுத்தி TIST திட்டத்தில் சேர்ப்பது
5. கையில் இருப்பதை கொண்டு மகிழ்ச்சியாக இருப்பது
6. மரம் வளர்ப்பது மற்றும் விவசாயத்திற்க்கும் இயற்கை முறையை கையாள்ளுவது
7. விவசாய கழிவு பொருள்களை எரிக்காமல் மல்சிங் என்னும் நல்ல முறையில் பயன்படுத்துவது
8. அதிக பணம் கொடுத்து நாற்றுகள் வாங்குவதை தவிர்ப்பது மற்றும் நாற்றுகளை அவர் அவர் தோப்புகளில் உறுப்பினர்களே தயாரிப்பது.

## Seedlings

When seedlings are started, utmost care need to be taken. Bags should be filled with sufficient amount of rich soil along with natural manure. This will help the root to grow strong and withstand the change in soil condition after transplanting. The new seedlings need sunlight, but not very hot direct sunlight, the tender leaves will burn.

TIST members care their seedlings by keeping the seedlings under thin sunlight.

## Watering

Water is required while planting trees. In the initial stage, young trees should be watered at least once in a week in the absence of rain. Overwatering should be avoided. If you are uncertain as to whether your tree grove needs watering, dig about half feet hole in the grove. If the soil at half feet depth is fine or powdery, the grove needs water.

## நாற்றுகள்

நாற்றுகள் தயாரிக்கும் போது நல்ல கவனத்துடனும், அக்கறையுடனும் செயல்பட வேண்டும். நாற்று பைகளை நல்ல மண்ணுடன் இயற்கை உரத்தை கலந்து நிரப்ப வேண்டும். இவ்வாறு செய்தால் வேர் நல்ல உறுதியாக வளரும் அதே நேரத்தில் பூமியில் நட்டப்பின் புதிய மண் / நிலத்தில் உள்ள மாற்றங்களை தாங்கி வளரும். புதிய நாற்றுகளுக்கு சூரிய ஒளி தேவை ஆனால் அதிக வெப்பமான வெயிலில் இருந்து மென்மையான துளிர்களை காப்பாற்ற வேண்டும்.

TIST உறுப்பினர்கள் நாற்றுகளை ஒரு தற்காலிகமான கூரை ஒன்றை அமைத்து அதில் வைத்து பராமரித்து வருகின்றனர்.

## தண்ணீர் விநியோகிப்பு

மரம் நடவுசெய்யும் போது தண்ணீர் தேவை. மரங்களை நடவு செய்த ஆரம்பகாலத்தில் இளமரங்களுக்கு வாரத்திற்கு ஒரு முறையாவது தண்ணீர் தேவை மழை இல்லாத நேரங்களில். மரங்களுக்கு அதிகமான தண்ணீர் கொடுப்பதை தவிர்க்க வேண்டும். உங்கள் மரத்தோப்புகளுக்கு தண்ணீர் தேவையா இல்லையா என்றவற்றை கண்டறிவதற்க்கு தோப்பில் ஒரு பகுதியில் அரை அடி குழி ஒன்றை தோண்டவும், அக்குழியில் அடிமட்டத்தில் உள்ள மண் நுண் துகள்ளாகவும், நீர்பசையற்றதாகவும் இருந்தால் அந்த மர தோப்பிற்க்கு தண்ணீர் தேவை.





By planting trees, TIST members are reducing the carbon dioxide from the atmosphere
மரங்கள் நட்டு வாயு மண்டலத்தில் உள்ள கார்பன்–டை–ஆக்சைடை குறைக்க உதவும் TIST சிறுகுழு உறுப்பினர்கள்.

## Mulching

It is so unfortunate that we almost lost the climate cycle. Rain, which is most essential is getting scarce year by year and summer, the hotter period of the year is expanding. In Tamil Nadu, we can expect some rain between October and December. Leaving the land open will lead to soil erosion during rain. Rain falls down on the ground with speed and blows the soil particles; the top soil gets washed away into drainage. We do not have good vegetation in our land to protect this soil erosion during coming rainy season. What to do? How to protect the soil from heavy rain when there is no vegetation? Mulching not only enriches the soil, but also protects the soil from erosion during rainy season. Mulch takes the force of the rain and allows the water seep into the soil slowly. Mulch stores lot of water in it and it protects moisture from getting evaporated.

Mulching is cost free; use your agriculture waste, grasses and weeds to create Mulch. Regular Mulching will maintain the moisture and prevent soil erosion.

## மல்சிங் முறை

இயற்கையாக உள்ள இயல்பான வானிலை தற்போது இல்லை இது நமக்கு ஏற்பட்ட பெரிய துரதிஷ்டம். மழை நமக்கு செழுமையை கொண்டு வரும் ஆனால் வருடம் தோறும் மழை குறைந்து கொண்டே வருகிறது. அதே நேரத்தில் வெயில் காலம் அதிகரிக்கிறது. தமிழ்நாட்டில் அக்டோபர் மாதத்தில் இருந்த டிசம்பர் மாதத்திற்குள் மழை எதிர்பார்க்கலாம், தாவரங்கள் இல்லாத நிலங்களில் மழைகாலங்களில் மண் அரிப்பு ஏற்படலாம். மழை துளிகள் வேகமாக நிலத்தில் விழும்போது நிலத்தின் மேல்பகுதியில் உள்ள மண் அசையபடுகிறது மற்றும் இவை தண்ணீரில் அடித்து செல்லபடுகிறது. நிலங்களில் நல்ல தாவரங்கள் இல்லாத காரணத்தால் இதை போன்ற மண்அரிப்பை தடுக்க முடியாமல் போயிவிடுகிறது. இதற்கு என்ன செய்வது ? தாவரங்கள இல்லாத நிலங்களில் எவ்வாறு மண் அரிப்பபை காப்பது. மல்சிங், அதாவது சறுகு மற்றும் கூளம் முதலிய பொருட்களை கொண்டு நிலங்களில் உள்ள மண் வளத்தை மேம்படுத்துவது ஒரு நல்ல முறையாகும். சறுகு மற்றும் கூளம் முதலிய பொருட்கள் மண் வளத்தை அதிகரிக்கும் அதே நேரத்தில் மண் அரிப்பையும் காக்கும். வேகமாக விழும் மழை துளிகள் இந்த கூளத்தின் மேல் பகுதியில் தான் விழுகின்றன. இந்த கூளம் வேகமாக விழும் மழை துளியை அதன் மேல் வாங்கிகொண்டு கீழே உள்ள மண் பகுதிக்கு தண்ணீரை மெதுவாக போக செய்யும். மேலும் சறுகு மற்றும் கூளபொருட்கள் அதிகமான தண்ணீரை அதன் உள் சேகரித்து வைத்து இருக்கும். மற்றும் நிலத்தின் ஈரத்தன்மையை காக்கும்

மல்சிங் செயல்முறையில் பணச் செலவு செய்ய தேவையில்லை. உங்களிடத்தில் உள்ள விவசாய கழிவு பொருட்கள், புல்வகைகள், செடிவகைகள் எல்லாம் சேர்த்து உங்களது நிலத்தின் மேல் பரப்பினாலே போதும். இந்த நல்ல செயல் முறையை தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உங்கள் நிலத்தின் மண் வளத்தை காக்கலாம் அதே நேரத்தின் மண் அரிப்பையும் காக்கலாம்.

**Sign the GHG agreement and receive the voucher payment**
ஜிஎச்ஜி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு வவுச்சர் தொகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்

The planting of trees is the least self-centred of all that we do. It is a purer act of faith than bring-up children
நாம் செய்யும் செயல்களிலேயே சுயநலமற்ற செயல் மரங்களை வளர்ப்பதுதான். குழந்தைகளை வளர்ப்பதை விட நம்பிக்கைக்கு உரியது மரங்களை வளர்ப்பது

## How to get rid of insects

Do not use chemical pesticides to kill the insects in your trees. Some times you will have to leave the trees undisturbed till the new rain comes. In the new rain insects may vanish automatically. Cultivate fruit bearing trees and plants along with flowering plants and invite butterflies, dragonflies, small size birds to your groves. All the insects in your trees will vanish automatically. It is a good practice to get advice from Forest Department to clean insects in trees. Contact your TIST Coordinator during Node or Quantification, they will get you good help from the Forest Department.

## மரங்களில் உள்ள பூச்சிகளை எவ்வாறு அகற்றுவது

உங்கள் மரங்களில் உள்ள பூச்சிகளை இராசாயண வேதியியல் பொருள் கொண்டு அகற்றுவதை தவிர்க்க வேண்டும். சில நேரங்களில் பூச்சியினால் பாதிக்கப்பட்ட மரங்களை மழைகாலம் வரை தொந்தரவு செய்யாமல் விட்டுவிடுவது நல்லது, புதிய மழையில் பூச்சிகள் தானாகவே மறைந்துவிடும். பழ வகை மரங்கள் மற்றும் செடிகள், பூசெடிகளை வளர்த்து பாட்டாம் பூச்சி, தும்பி, சிறிய பறவைகள் போன்ற உயிரினங்களை உங்களது தோப்புக்கு வர வாய்ப்பு கொடுங்கள். உங்கள் மரத்தில் உள்ள பூச்சிகள் இந்த சிறிய உயிரினங்களினால் தானகவே மறைந்து விடும். மரங்களில் உள்ள பூச்சிகளை அகற்றுவதற்க்கு வனத்துறையிடம் இருந்து ஆலோசனை பெறுவது நல்ல ஒரு செயல் ஆகும். நோட் கூட்டங்களில் TIST ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளுங்கள், அவர்கள் உங்களுக்கு தேவையான அனைத்து ஆலோசனைகளையும் வனத்துறையிடம் இருந்து பெற்று தருவார்கள்.



Mr.M.Theagarajan, District Forest Officer, Tiruvannamalai District addressing the queries of TIST groups in a meeting

திரு.தியாகராஜன், DFO திருவண்ணாமலை மாவட்டம், TIST சிறுகுழு கூட்டத்தில் கேள்விகளுக்கு விளக்கமளிக்கிறார்

## What is carbon footprint?

Carbon footprint is the total amount of carbon dioxide that an individual creates every day. In the present world, every individual in some way increases carbon dioxide and contributes to global warming. A farmer in whose house television is on for more than 10 hours a day says that "we do not emit carbon dioxide". That farmer does not know that to watch television for 10 hours how much electricity is used and to produce that electricity some thing is burnt in a power plant and carbon dioxide is emitted in this process.

In the present situation, we cannot stop the global warming because we have converted all our unwanted needs to primary essential requirements, but we can take good steps to reduce global warming. First good step is to plant hundreds and thousands of trees which cleans the carbon dioxide that are already present in the atmosphere. All the subsistence farmers in TIST Program (worldwide) have planted more than 90 lakh trees. Second good step is to be contented with what we have and stop running behind unwanted needs, this will reduce future emission. 60,000 subsistence farmers in TIST Sustainable Program have learnt to be happy with limited needs.



## கார்பன் அடிச்சுவடு என்றால் என்ன ?

தனி ஒரு மனிதன் அவருடைய அன்றாட வாழ்க்கையில் அவரால் உருவாக்கப்பட்ட கார்பன்–டை–ஆக்சைடை கார்பன் அடிச்சுவடு என்று கூறலாம். தற்போதிய காலக்கட்டங்களில் ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு வழியில் மற்றும் முறையில் வாயு மண்டலத்தில் கார்பன்–டை–ஆக்சைடின் அளவை அதிகரித்து புவிவெப்பமடைவதற்க்கு ஒரு காரணமாக இருக்கிறான். பத்து மணி நேரம் தொலைக்காட்சி பார்க்கும் ஓர் விவசாயி கூறுகிறார், "நாங்கள் எந்த வழியிலும் கார்பன்–டை–ஆக்சைடை வெளிப்படுத்தவில்லை". அந்த விவசாயிக்கு தெரியவில்லை, அவர் பத்து மணி நேரம் தொலைக்காட்சி பார்ப்பதற்க்கு தேவையான மின்சாரம் தயாரிப்பதற்க்கு மின் ஆலையில் ஏதோ ஒரு பொருளை எரித்து தான் தயாரிக்க வேண்டும். அந்த பொருளை எரிக்கும் போது கார்பன்–டை–ஆக்சைடு வெளியிடப்படுகிறது.

தற்போதிய சூழலில் நாம் பூமி வெப்பம் அடைவதை தவிர்க்க முடியாது ஏனெனில் நாம் நமக்கு தேவையில்லாத பொருள்களை மிக முக்கியமான தேவையுள்ள பொருள்களாக மாற்றிவிட்டோம். ஆனால் புமி வெப்பம் அடைவதை குறைப்பதற்கு நாம் நல்ல தீர்மானங்களை எடுக்கலாம். முதல் தீர்மானம் நூற்றுக்கானக்கான, ஆயிரக்கானக்கான மரங்களை நடவு செய்யலாம், இம்மரங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்ட கார்பன்–டை–ஆக்சைடை சுத்தம் செய்யும். TIST திட்டத்தில் உள்ள எல்லா சிறுகுழு விவசாயிகளும் (உலகேங்கும்) 90 லட்சம் மரங்களை நட்டுள்ளார்கள். இரண்டாவது தீர்மானம் இருப்பதை கொண்டு மகிழ்ச்சியாக இருக்க கற்றுக்கொள்வது, தேவையில்லாத பொருள்களை அடைய முயற்சிக்காமல் இருப்பது, இது எதிர்காலத்தில் அதிகமான கார்பன்–டை–ஆக்சைட் வெளியிடுதலை குறைக்கும். TIST - யின் நிரந்திரமான திட்டத்தில் உள்ள 60 ஆயிரம் சிறுகுறு விவசாயிகள் குறைவான தேவைகளை கொண்டு மகிழ்ச்சியாக இருக்க கற்று கொண்டனர்.

## TIST Meeting at Villupuram

Mr.K.Sudhagar, Forest Ranger, Villupuram District, lead the TIST Small Groups meeting in Villupuram and distributed TIST Voucher Payment to the groups.

On 22.04.2010 members from more than 50 small groups joined in the meeting organized by TIST to learn the best practices in the TIST Program. Mr.Sudhagar, Forest Ranger, Villupuram District warmly accepted TIST invitation and participated in the meeting. He addressed the groups in a simple cheerful way and answered to the queries clearly. He also explained the procedure and the natural way to prepare seedlings, transplanting and maintaining the same for years. During the end of the meeting the Forest Ranger distributed TIST Vouchers to the TIST Small Groups of Villupuram District and encouraged them to be more active. TIST wishes a big thanks to Mr.Sudhagar, Forest Ranger, Villupuram District. TIST wishes a special thanks to Mrs.K.Geethanjali, IFS, DFO, Villupuram District and to Mr.P.Vardharajan, CCF, Villupuram District for their kind help to organize TIST meeting at the Villupuram Forest Department Guest House Premises.

## விழுப்புரத்தில் TIST கூட்டம்

திரு. K. சுதாகர், வனசரகர், விழுப்புரம் மாவட்டம், TIST யின் சிறுகுழு கூட்டத்தை தலைமை தாங்கி TIST சிறுகுழுக்களுக்கு TIST ன் பற்றுச்சீட்டை வழங்கினார்.

22.04.2010 அன்று TIST ஏற்பாடு செய்துள்ள பயிற்சி கூட்டத்திற்கு 50க்கும் மேற்பட்ட சிறுகுழுக்களில் இருந்து உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். திரு. K. சுதாகர், வனசரகர், விழுப்புரம் மாவட்டம், மகிழ்ச்சியுடன் TIST-யின் வரவேற்ப்பை ஏற்றுக்கொண்டு TIST கூட்டத்தில் கலந்து கொண்டார். அவர் மன எழுச்சியுடன் குழுக்கள் கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் விளக்கம் அளித்தார். அவர் நாற்றுகளை எவ்வாறு இயற்கை முறையில் தயாரிப்பது, எவ்வாறு நடவுசெய்வது மற்றும் எவ்வாறு பராமரிப்பது என்றவற்றை தெளிவாக எடுத்துரைத்தார். கூட்டத்தின் முடிவில் வனசரகர் TIST யின் பற்றுச்சீட்டை TIST குழுக்களுக்கு வழங்கி அவர்களை ஊற்சாகப்படுத்தினார். TIST தனது நன்றியை திரு. K. சுதாகர், வனசரகர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறது. இக்கூட்டத்திற்கு விழுப்புரத்தில் உள்ள வனத்துறையின் விருந்தினர் இல்லத்தில் நடத்த ஆலோசனை மற்றும் அனுமதி கொடுத்த திருமதி. K. கீதாஞ்சலி IFS, DFO, விழுப்புரம் மாவட்டம் மற்றும் திரு. P. வரதராஜன், IFS, CCF, விழுப்புரம் மாவட்டம் அவர்களுக்கு TIST தனது சிறப்பான நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.





Mr.K.Sudhakar, Forest Ranger, Villupuram District, distributing TIST vouchers to TIST Small Groups

TIST கூட்டத்தில் திரு. K. சுதாகர், வனசரகர், விழுப்புரம் மாவட்டம் TIST உறுப்பினர்களுக்கு பற்றுச்சீட்டை வழங்குகிறார்

## Senthilkumar Small Group of Thirupathur Center

The members of this small group are following the best practices of TIST at Naikannur Village at Thirupattur Center. The members have dedicated about 4 acres of land for planting trees in TIST Program. They have formed four groves and planted 1129 trees. During last quantification, there are 209 Sapota, 815 Teak and 105 Kumil trees with this small group. They have given good spacing between every tree species to practice short time intercrops regularly. Recently, one more new family joined with this small group and has planted few new trees.

There should be minimum 6 to maximum 12 members in every small group. If your group has less than 6 members, join your neighbours with you, encourage them to plant trees and give them the opportunity to enjoy the benefits of trees. When you join new members in your group, inform your Coordinator during Node meeting and enter the new members name in the small group resolution page in the TIST SGMR Note book. Also, get the original copy of your GHG from your Coordinator and make the new members sign the GHG too. More importantly, educate the new members all about TIST Program.

## திருப்பத்தூர் மையத்தை சார்ந்த செந்தில்குமார் சிறுகுழு

செந்தில்குமார் சிறுகுழு உறுப்பினர்கள் TIST யின் சிறந்த பயிற்சி முறைகளை திருப்பத்தூர் மையத்தில் உள்ள நாயக்கனூர் கிராமத்தில் கடைப்பிடித்து வருகின்றனர். இவ்வுறுப்பினர்கள் TIST ல் மரம் நடவுவதற்க்காக அவர்களது சொந்த 4 ஏக்கர் நிலப்பரப்பை ஒதுக்கி உள்ளனர். அந்நிலங்களை நான்கு தோப்புகளாக அமைத்து 1129 மரங்களை நடவு செய்துள்ளனர். கடைசியாக எடுத்த கணக்கின் படி இக்குழுவிடம் 209 சப்போட்டா, 815 தேக்கு மற்றும் 105 குமிழ் மரங்கள் உள்ளன. எல்லா மரவகைகளுக்கிடையே நல்ல இடைவெளி விட்டு குறுகிய கால பயிற்களை ஊடுபயிராக செய்வதற்க்கு திட்டமிட்டுள்ளனர். சமீபத்தில் இக்குழுவில் ஒரு புதிய குடும்பம் இனைந்து புதிய மரங்களை நடவு செய்துள்ளனர்.

ஒவ்வொரு குழுவிலும் குறைந்தது 6 உறுப்பினர்கள் மற்றும் அதிகபட்சம் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும். உங்கள் குழுவில் 6க்கும் குறைவான உறுப்பினர்கள் இருந்தால் உங்கள் அருகாமையில் வசிப்பவர்களை புதிய உறுப்பினர்களாக சேர்த்துக் கொண்டு, அவர்களை ஊற்சாகப்படுத்தி மரம் நட செய்து TIST ல் உள்ள சலுகைகளை பெற உதவுங்கள். புது உறுப்பினர்களை உங்கள் குழுவில் சேர்க்கு போது கணுக்கூட்டத்தில் உங்களது ஒருங்கினைப்பாளரிடம் தகவல் சொல்லவும் மற்றும் உங்களது SGMR புத்தகத்தில் முதல் பக்கத்தில் உள்ள குழுக்களின் தீர்மானம் பகுதியில் புது உறுப்பினரின் பெயரை பதிவ செய்யவும். உங்களது ஒருங்கினைப்பாளரிடம் இருந்து உங்களின் GHG ஒப்பந்தத்தை பெற்று அதிலும் புதிய உறுப்பினர்களின் கையொப்பம் பெறவும். முக்கியமான காரியம் என்னவென்றால் புதிதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர்களுக்கு TIST திட்டத்தைப் பற்றி எடுத்துரைக்க வேண்டும்.

Are you ready with your seedlings for transplanting?
Make use of the coming rainy season.
தங்கள் நாற்றுக்கண்களுடன் தாங்கள் தயாராக உள்ளீர்களா ?
மழைக்காலத்தை நன்றாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## டிஐஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஐஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.
3. டிஐஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.
4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும.,
5. எல்லா சிறு குழுவும் கீரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.
6. டிஐஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கீரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).
7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஐஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.
8. 2மீஇடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.
9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஐஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.
10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.
11. டிஐஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.
12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.
13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.
14. குழுவின் அங்கத்தினர்கள் டிஐஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.
15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்கும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.